# Lenten Retreat 2022

Agenda

1. Praise - https://mygreatmaster.com/praises/
2. Worship - 5 different intentions and prayer
3. Songs - 5 to 10 songs as possible
4. பாவ மன்னிப்பு வேண்டல் - 5 reasons

**Opening Song 1**

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

இப்போ வாரும் இறங்கி வாரும்

எங்கள் மத்தியில

உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே

பாவம் கழுவி தூய்மையாக்கும் இந்த வேளையிலே

பத்மு தீவினிலே பக்தனைத் தேற்றினீரே

என்னையும் தேற்றி ஆற்ற வாரும் இந்த வேளையிலே

சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே

ஆத்ம தாகம் தீர்க்க வாரும் இந்த வேளையிலே

நேசரின் மார்பினிலே இனிதாய் சாய்ந்திடவே

ஏக்கமுற்றேன் விரும்பி வந்தேன் உந்தன் பாதத்திலே

ஆவியின் வரங்களினால் என்னையும் நிரப்பிடுமே

எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும் இந்த வேளையிலே

**Opening Song 2**

ஓ பரிசுத்த ஆவியே

என் ஆன்மாவின் ஆன்மாவே

உம்மை ஆராதனை செய்கின்றேன்

இறைவா ஆராதனை செய்கின்றேன்

1. என்னை ஒளிரச் செய்து வழிகாட்டும்

புது வலுவூட்டி என்னை தேற்றும்

என் கடமை என்னவென்று காட்டும்

அதை கருத்தாய் புரிந்திட தூண்டும்

என்ன நேர்ந்தாலும்

நன்றி துதி கூறி பணிவேன் என் இறைவா

உந்தன் திருவுளப்படி என்னை நடத்தும் – ஓ பரிசுத்த ஆவியே } – 2

**Opening song 3**

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே

ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கிவா (2)

ஆசீர்வதியும் என் நேசக் கர்த்தரே

ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்

1. கன்மலையைப் பிளந்து வனாந்திரத்திலே

கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே

பள்ளத்தாக்கிலும் மலைகளிலும்

தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே — ஊற்று

2. ஜீவத் தண்ணீராம் எந்தன் நல்ல கர்த்தாவே

ஜீவ ஊற்றினால் என்னை நிறைத்திடுவீர்

கனி தந்திட நான் செழித்தோங்கிட

கர்த்தரின் கரத்தால் நித்தம் கனம் பெற்றிட — ஊற்று

3. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே

இரட்சகரின் காயங்கள் வெளிப்படுதே

பாவக்கறைகள் முற்றும் நீங்கிட

பரிசுத்தர் சமுகத்தில் ஜெயம் பெற்றிட — ஊற்று

**Opening song 4**

தூய ஆவியே துணையாக வருவீர்

இயேசுவின் சாட்சிகளாய் எம்மை மாற்றிடுவீர் – 2

மனத்தின் தீமைகளை மன்னிக்க வருவீர்

மனத்தின் கீறல்களை மாற்றிட வருவீர் – 2

மனத்தின் பாரங்களைப் போக்கிட வருவீர்

மனத்தின் காயங்களை ஆற்றிட வருவீர் – 2

தாழ்வு மனம் நீக்கித் தேற்றிட வருவீர்

தடுமாறி நான் விழாமல் தாங்கிட வருவீர் – 2

பாவப் பிடிநின்று மீட்டிட வருவீர்

பாவக் கறை கழுவி தூய்மை தர வருவீர் – 2

கல்மன இதயத்தைக் கரைத்திட வருவீர்

இதயத்தின் வெறுப்புகளை விலக்கிட வருவீர் – 2

## Part I (10 minutes) - Anju & Monica

Praises - உங்கள் பதிலுரை -  உம்மை துதிக்கிறோம்

அப்பா தந்தையே உம்மை துதிக்கிறோம்

அன்பின் தந்தையே  உம்மை துதிக்கிறோம்

வியத்தகு ஆலோசகரே  உம்மை துதிக்கிறோம்

விண்ணகத் தந்தையே  உம்மை துதிக்கிறோம்

ஒளியின் பிறப்பிடமே  உம்மை துதிக்கிறோம்

இரக்கம் நிறைந்த கடவுளே  உம்மை துதிக்கிறோம்

மாட்சிமிகு தந்தையே  உம்மை துதிக்கிறோம்

எங்களைப் படைத்த தெய்வமே  உம்மை துதிக்கிறோம்

எங்களை உருவாக்கிய தெய்வமே  உம்மை துதிக்கிறோம்

என் (எங்கள்)தந்தையே  உம்மை துதிக்கிறோம்

விண்ணுலகில் இருக்கும் எங்கள் தந்தையே  உம்மை துதிக்கிறோம்

எங்கள் அனைவருக்கும் தந்தையே  உம்மை துதிக்கிறோம்

ஆண்டவர் இயேசுவின் தந்தையாம்  உம்மை துதிக்கிறோம்

நீதியுள்ள தந்தையே  உம்மை துதிக்கிறோம்

மறைவாய் உள்ளத்தைக் காணும் எங்கள் தந்தையே  உம்மை துதிக்கிறோம்

நேர்மையாளரின் தந்தையே உம்மை துதிக்கிறோம்

இஸ்ரயேலின் தந்தையே உம்மை துதிக்கிறோம்

வாழும் தந்தையே  உம்மை துதிக்கிறோம்

மாட்சிமிகு கடவுளே  உம்மை துதிக்கிறோம்

மாண்புமிகு இறைவனே  உம்மை துதிக்கிறோம்

**Worship intention 1-** திருச்சபை, திருத்தந்தை , ஆயர்கள், குருக்கள், இறைப்பணி ஊழியர்கள், சமூக பணி புரிவோர்

**Reflection 1 : First 3 commandments**

**Song - 1**

அப்பா நான் தவறு செய்தேன்
உன் அன்பை உதறிச் சென்றேன்
நான் கெட்டலைந்து ஓடி வந்தேன்
என்னைக் கண்பாரும் உந்தன் பிள்ளை நான் (2)

1. பாடிவரும் பறவைகளும் காடுகளில் மிருகங்களும்

உன்னன்பில் மகிழ்ந்திருக்க நான்

உன்னைப் பிரிந்து நொந்தேன் (2)

2. சுமைகளில் சோர்ந்தோரே என்னிடத்தில் வாருமென்றீர்

ஆறுதல் வார்த்தை என்னை உன்னிடத்தில் ஈர்த்ததையா (2)

## Part II (10 minutes) - Joy & Altrine

Praises - உங்கள் பதிலுரை - உம்மை போற்றுகிறோம்

தெய்வங்களின் இறைவனே உம்மை போற்றுகிறோம்

வாழும் கடவுளே உம்மை போற்றுகிறோம்

அன்பின் கடவுளே உம்மை போற்றுகிறோம்

என்றுமுள்ள கடவுளே உம்மை போற்றுகிறோம்

ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றே உம்மை போற்றுகிறோம்

என் ஆற்றலானவரே உம்மை போற்றுகிறோம்

ஆபிரகாமின் கடவுளே உம்மை போற்றுகிறோம்

ஈசாக்கின் கடவுளே உம்மை போற்றுகிறோம்

யாக்கோபின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

இஸ்ரயேலின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

எலியாவின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

தாவீதின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

தானியேலின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

சாத்ராக்,மேசாக்,ஆபேத்நேகாவின் கடவுளே  உம்மை
போற்றுகிறோம்

தந்தையாம் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

பொய் கூறாத கடவுளே  உம்மை போற்றுகிறோம்

நம் முன்னோரின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

என் மூதாதாயரின் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

உலக முழுமைக்கும் கடவுளே  உம்மை போற்றுகிறோம்

உலகிலுள்ள அனைத்து அரசுகளுக்கும் கடவுளே  உம்மை
போற்றுகிறோம்

**Worship intention 2 -** பாவ மன்னிப்புக்காக, பாவத்திலிருந்து விடுபட, உலக மக்கள் கடவுளை அறிய, பாவ பிடியிலிருந்து உலகம் விடுபட  **- Altrine**

**Reflection - 4,5,6 Commandments**

**Song - 2**

இயேசுவின் அன்பை மறந்திடுவாயோ

மறந்திடுவாயோ மனிதப் பண்பிருந்தால்

மறந்திடாதிருக்க சிலுவையிலே அவர்

மரித்துத் தொங்கும் காட்சி

மனதில் நில்லாதோ

அளவில்லா அன்பு அதிசய அன்பு

ஆழம் அகலம் நீளம் எல்லைகாணா அன்பு

களங்கமில்லா அன்பு கருணைசேர் அன்பு

கல்வாரி மலையெங்கும் கதறிடும் அன்பு

ஈடில்லா அன்பு இணையில்லா அன்பு

இயேசுவின் உயிர் தந்த இலட்சிய அன்பு

ஆனந்த அன்பு அபூர்வ அன்பு

ஆண்டவர் இயேசு நம்மீது கொண்ட அன்பு

எனக்காக மனுவுரு தரித்த நல்லன்பு

எனக்காக தன்னையே உணவாக்கும் அன்பு

எனக்காக பாடுகள் ஏற்ற பேரன்பு

எனக்காக உயிரையே தந்த தேவன்பு

**Part III (10 minutes) - Sumati & Justin**

## Praises - உங்கள் பதிலுரை - உம்மை துதிக்கிறோம்

பாவத்தையும் தீட்டையும் நீக்கி தூய்மையாக்கும் நீரூற்றே உம்மை துதிக்கிறோம்

மாசு மறுவற்ற ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறித்துவின் இரத்தமே உம்மை துதிக்கிறோம்

கிறித்துவின் விலை மதிப்பற்ற இரத்தமே உம்மை துதிக்கிறோம்

இயேசுவின் இரத்தமே உம்மை துதிக்கிறோம்

சிறந்த முறையில் குரல் எழுப்பும் இயேசுவின் இரத்தமே உம்மை துதிக்கிறோம்

கடவுளின் சொல்லொன்ணாக் கொடைகளுக்காக உம்மை துதிக்கிறோம்

பலியிடப்பட்ட பாஸ்க்கா ஆடாகிய இயேசுகிருஸ்த்துவே உம்மை துதிக்கிறோம்

அனைத்துலக பாவங்களுக்கு கழுவாய் ஆனவரே  உம்மை துதிக்கிறோம்

எங்கள் பாவங்களுக்கு கழுவாய் ஆனவரே  உம்மை துதிக்கிறோம்

குருத்துவ உடன்படிக்கைக்கு காப்புறுதி அளிப்பவரே  உம்மை துதிக்கிறோம்

அருட்பொழிவு பெற்றவரான மேசியாவே  உம்மை துதிக்கிறோம்

எங்கள் முன்னோடியே  உம்மை துதிக்கிறோம்

இறுதிவரை எங்களை வழிநடத்துபவரே  உம்மை துதிக்கிறோம்

இறைமகனே,எங்கள்ரபியே  உம்மை துதிக்கிறோம்

ஈசாய் என்னும் அடிமரத்தினின்று தளிர்விட்ட தளிரே   உம்மை துதிக்கிறோம்

தாவீதின் குலகக் கொழுந்தே உம்மை துதிக்கிறோம்

தளிர் என்னும் பெயர்கொண்டவரே உம்மை துதிக்கிறோம்

மன்னர் தாவீது என அழைக்கப்பட்டவரே  உம்மை துதிக்கிறோம்

ஊழியன் தாவீது என அழைக்கப்பட்டவரே  உம்மை துதிக்கிறோம்

போற்றுதற்குரிய ஆண்டவரே  உம்மை துதிக்கிறோம்

தூய்மையில் மேலோங்கியவரே உம்மை துதிக்கிறோம்

**Worship intention 3 - CATCA** குடும்பங்களுக்காக, குழந்தைகளுக்காக, வேலை வாய்ப்பிற்க்காக, குடும்பங்களில் அமைதியும் சமாதானமும் நிலவ

**Reflection - 7,8,9,10 commandments**

**Song 3a-**

எதை நான் தருவேன் இறைவா – உன்

இதயத்தின் அன்பிற்கீடாக

எதை நான் தருவேன் இறைவா

குறை நான் செய்தேன் இறைவா – பாவக்

குழியில் விழுந்தேன் இறைவா

கறையாம் பாவத்தை நீக்கிடவே – நீ

கல்வாரி மலையில் இறந்தாயோ

பாவம் என்றொரு விஷத்தால் – நான்

பாதகம் செய்தேன் இறைவா

தேவனே உன் திருப்பாடுகளால் – என்னைத்

தேற்றிடவோ நீ இறந்தாயோ

Song 3b

கருணை தெய்வமே கண்பாரும்

எங்கள் பாவங்களை நீர் பொறுத்தருளும்

1. உடலும் மனமும் அறிவும் ஒன்றுசேர்ந்து

உம்மை எதிர்த்ததையா (2)

தேவ வாக்கின் வழியை மனம்

பன்முறை அறிந்தும் வெறுத்ததையா

பாவச்சேற்றை வாழ்வில் எம்வாழ்வே கொண்டு நிறைந்ததையா

2. பாதை தெளிவுறத் தெரிந்தும் - அதைப்

பார்த்து நாங்கள் நடக்கவில்லை (2)

உண்மை விளக்கு எரிந்தும் - அதன்

ஒளியின் அருகே வாழவில்லை

இறைவன் அன்பு அழைத்தும் - அதை

உணர்ந்த பின்னும் திருந்தவில்லை

## Part IV (10 minutes) - Edison & Harriet

Praises - உங்கள் பதிலுரை - உம்மை துதிக்கிறோம்

நான் செல்லும் இடமெல்லாம் என்னை காக்கும் படி தம் தூதருக்கு அவர் கட்டளையிடுவார் என்ற வாக்குத்தததிற்காய் உம்மை துதிக்கிறோம்

என் கால் கல்லின் மேல் மோதாதபடி அவர்கள் கைகளில் உம்மைத் தாங்கி கொள்வர் என்ற வாக்கு தத்ததிர்க்காய் உம்மை துதிக்கிறோம்

சிங்கத்தின் மீதும் பாம்பின் மீதும் நீர் நடந்து சொல்வீர் இளஞ் சிங்கத்தின் மீதும் விரியன் பாம்பின் மீதும் நீர் மிதித்துச் சொல்வீர் என்ற வாக்குத்தததிற்காய் உம்மை துதிக்கிறோம்

அவர்கள் என்மீது அன்பு கூர்ந்ததால் அவர்களை என் பெயரை அறிந்துள்ளதால் அவர்களைப் பாதுகாப்பேன் என்ற  வாக்குத்தததிற்காய் உம்மை துதிக்கிறோம்

அவர்கள் என்னை நோக்கி மன்றாடும் போது அவர்களுக்கு பதில் அளிப்பேன் அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன் அவர்களைத் தப்புவித்து அவர்களை பெருமைப்படுத்துவேன் என்ற வாக்குத்தததிற்காய் உம்மை துதிக்கிறோம்

ஆண்டவர் தம் மக்களைத் தள்ளி விடார் தம் உரிமைச் சொத்தாம் அவர்களை கை விடார் என்ற வாக்குத் தத்ததிற்காக உம்மை துதிக்கிறோம்

உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர் என்னும் வாக்கிற்காக  உம்மை துதிக்கிறோம்

உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகளைப் போல் உம்மை சூழ்ந்திருப்பர்  என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

ஆண்டவர் சியோனிலிருந்து உமக்கு ஆசி வழங்குபவராக உம் வாழ்நாள் எல்லாம் எருசலேமின் நல் வாழ்வைக் காணும்படியாக செய்வார் என்ற வாக்கிற்காய் உம்மை துதிக்கிறோம்

நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பீர் என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

உன் வழிமரபினர் மீது என் ஆவியைப் பொழிவேன் உன் வழித் தோன்றல் களுக்கு நான் ஆசிவழங்குவேன் என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

உன்னைக் எதிர்த்து போரிடுபவருடன்நானும் போரிடுவேன் உன் பிள்ளைகளை விடுவிப்பேன் என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர் தாமே கற்றுத் தருவார் உன் பிள்ளைகள் நிறை வாழ்வு பெற்றுச்சிறப்புப் பெறுவார் என்ற வாக்கிற்காய் உம்மை துதிக்கிறோம்

மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன் மீது கொண்ட பேரன்பே நிலை சாயாது என் சமாதானத்தின் உடன் படிக்கையே அசைவுறாது என்கிறார் உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர் என்னும் வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

என் அருள் உனக்குப் போதும் வலுவின்மையில்  தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

இருமடங்கு நன்மைகள் நான் உனக்கு தருவேன் என்று இன்று உங்களுக்கு அறிவிக்கின்றேன் என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

சிங்கக் குட்டிகள் உணவின்றி பட்டின இருக்க நேரிட்டாலும் ஆண்டவரை நாடுவோர்க்கு நன்மை ஏதும் குறையாது என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

நான் உனக்கு அறிவு புகட்டுவேன் நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு காட்டுவேன் உன்னைக் கண்ணோக்கி உனக்கு அறிவுரை கூறுவேன் என்ற வாக்கிற்காய்  உம்மை துதிக்கிறோம்

துன்ப வேளையில் என்னை நோக்கிக் கூப்பிடுங்கள் உங்களைக் காத்திடுவேன் அப்போது நீங்கள் என்னை மேன்மை படுத்துவீர்கள் என்ற வாக்கிற்காய் உம்மை துதிக்கிறோம்

**Worship intention 4 -**  கைவிடப்பட்டோர், கைம்பெண்கள், அநாதை குழந்தைகள், சிறையில் உள்ளோர், மருத்துவமனையில் உள்ளோர், உடல்-ஆன்ம வலுவிழந்தோர், **Ukraine**

**Song 4-**
கருணை இறைவா சரணம் கடைக்கண் பாராய் சரணம்
- நட்பினை விடுத்தோம் நலம்தனை இழந்தோம்
- ஆசைகள் வளர்த்தோம் அன்பினை விடுத்தோம்
- நீதியை மறந்தோம் நேர்மையைத் துறந்தோம்
- ஒளியினை வெறுத்தோம் இருளினில் அலைந்தோம்
- மன்னிக்க மறந்தோம் மரமென இருந்தோம்

## Part V- Father’s talk (1 hr)

Father’s talk on retreat

Song 5

கல்மனம் கரைய கண்களும் பனிக்க

கைகளைக் குவித்தேன் இறைவா

என் மனம் வருவாய் இறைவா (2)

என்னகம் புகுந்து இதயத்தில் அமர்ந்து

பொன்னகம் புனைவாய் இறைவா (2) அங்கு

புன்மைகள் மறைந்து நன்மைகள் நிறைய

இன்னருள் தருவாய் இறைவா -2

பாசத்தைக் களைந்து பாவத்தை விலக்க

பாதத்தைப் பிடித்தேன் இறைவா (2) துயர்

வீசிடும் புயலும் வெகுண்டெழும் அலையும்

அமைந்திடப் பணிப்பாய் இறைவா -2

நான் எனும் அகந்தை நரகத்தை அழித்து

நல்லுலகமைப்போம் இறைவா (2) அங்கு

பூவெனும் இதய பீடத்தில் எனையே

பலியாய் அளிப்பேன் இறைவா

## Part VI - Adoration (30 minutes)

மாண்புயர் இவ்வருள் அனுமானத்தை
தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும் மறைந்து முடிவு பெறுக
புதிய நியம முறைகள் வருக புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறையை நீக்க விசுவாசத்தின் உதவி பெறுக
பிதா அவர்க்கும் சுதன் இவர்க்கும்
புகழ்ச்சியோடு வெற்றியார்ப்பும்
மீட்பின் பெருமை மகிமையோடு
வலிமை வாழ்த்து யாவும் ஆக
இருவரிடமாய் வருகின்றவராம் தூய ஆவியானவர்க்கும்
அளவில்லாத சம புகழ்ச்சி என்றுமே உண்டாகுக. ஆமென்

அருட்திரு தேவ தேவன் போற்றி

அவர் தம் திரு நாமம் போற்றி

1. அவர் மகன் இயேசு கிறிஸ்து போற்றி

அவர் தம் திரு அன்பே போற்றி

2. அருட்திரு தூய ஆவி போற்றி

அவர் தம் திரு ஞானம் போற்றி

3. அருட்திரு அன்னை மரியாள் போற்றி

அவர் தம் திரு தூய்மை போற்றி

4. அருட்திரு சூசை முனியும் போற்றி

அவர் தம் திரு வாய்மை போற்றி

5. அருட்திரு தூதர் அமரர் போற்றி

அவர் தம் திரு சேவை போற்றி

அன்பின் தேவநற்கருணையிலே
அழியாப் புகழோடு வாழ்பவரே
அன்புப் பாதையில் வழிநடந்தே

அடியோர் வாழ்ந்திடத் துணை செய்வீர்

1. அற்புதமாக எமைப் படைத்தீர்

தற்பரன் நீரே எமை மீட்டீர்

பொற்புடன் அப்பரச குணத்தில்

எப்பொழுதும் வாழ் இறைவனானீர்

எத்தனை வழிகளில் உமதன்பை

எண்பித்தெமை நீ ஆட்கொண்டீர்

2. கல்வாரி மலையின் சிகரமதில்

கனிவுடன் தினம் எமை நிலை நிறுத்தும்

நற்கருணை விசுவாசமதில்

நம்பிக்கையூட்டி வளத்திடுவீர்

இளமையின் பொழிவால் திகழ் திருச்சபையும்

யாவரும் வாழத் தயை புரிவீர்